# திருவழிபாட்டின் திருமணிகள்

## ஈஸ்தர் ஞாயிறு
சங்கீதமாலை

முதல்: இறைவா, எமக்குத் துணைபுரிய வாரும்
எல்: ஆண்டவரே, எமக்குத் துணைபுரிய விரைந்து வாரும்
முதல்: பிதாவுக்கும் சுதனுக்கும்...



பாடல்:

## உயிர்த்தார்

உயிர்த்தார் உயிர்த்தார் உயிர்த்தார்
இன்று உயிருள்ள கடவுளின் மகன் உயிர்த்தார்
இன்று உயிருள்ள கடவுளின் மகன் உயிர்த்தார்

அல்லேலூயா நாம் ஆர்ப்பரிப்போம் 2

1. பழைய ஆதாம் இறந்துவிட்டார் - இன்று
   புதிய ஆதாம் உயிர்த்துவிட்டார் 2
   பழைய ஆடைகள் களைந்திடுவோம் – புது
   பண்புகள் தேடி வாழ்ந்திடுவோம்
   அல்லேலூயா நாம் ஆர்ப்பரிப்போம் 2

2. உயிர்த்த இயேசுவை விசுவசிப்போம் - அவர்
   உயிர்ப்பினில் நாமும் பங்கு கொள்வோம் 2
   உயர்ந்த நோக்குடன் வாழ்ந்திடுவோம் - நாம்
   அவருடன் உயிர்த்து மகிழ்ந்திடுவோம்
   அல்லேலூயா நாம் ஆர்ப்பரிப்போம் 2



## ஆண்டவரின் செபம்

பரலோகத்தில் இருக்கிற
எங்கள் பிதாவே,
உம்முடைய நாமம்
அர்ச்சிக்கப்படுவதாக.
உம்முடைய இராச்சியம் வருக,
உம்முடைய சித்தம் பரலோகத்தில்
செய்யப்படுவது போல
பூலோகத்திலும் செய்யப்படுவதாக.
எங்கள் அனுதின உணவை
இன்று எங்களுக்குத் தாரும்:
எங்களுக்குத் தீமை
செய்தவர்களை
நாங்கள் பொறுப்பது போல
எங்கள் பாவங்களைப்
பொறுத்தருளும்.
எங்களைச் சோதனையில்
விழவிடாதேயும்
தீமையிலிருந்து எங்களை
இரட்சித்தருளும்.

## மன்றாட்டுக்கள்

இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய கிறிஸ்து, இப்போது நமக்காகப் பரிந்து பேச வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரிடம் அக்களிப்புடன் வேண்டுவோம்.

**பதில்: வெற்றியின் அரசரே, எங்களுக்குச் செவிசாய்த்தருளும்.**

கிறிஸ்துவே, நீரே உலகின் ஒளியும் நாடுகளின் மீட்புமாவீர் - நாங்கள் உமது உயிர்ப்பின் மாண்பினைப் பறைசாற்றும்போது, எங்களில் உம் ஆவியாரின் நெருப்பை மூட்டியருளும்.

இஸ்ரயேல் மக்கள் தாங்கள் எதிர்பார்த்திருந்த மெசியாவை உம்மில் கண்டுகொள்வார்களாக - அனைத்து மாந்தரையும் உமது மாட்சியின் மெய்யறிவால் நிரப்பியருளும்.

உம் தூயவர்களுடைய உறவில் எங்களை இணைத்துக் காத்தருளும் - எங்கள் வாழ்வின் இறுதி நெருங்கும்போது, நாங்களும் அவர்களோடு அமைதியில் இளைப்பாறுவோமாக.

மனிதரின் இறுதிப் பகைவனாகிய சாவின்மீது நீர் வெற்றி கொண்டீர் - கடவுளுக்குப் பகைமையாய் இருக்கும் அனைத்தையும் எங்களில் அழித்தருளும்.

எம் மீட்பராகிய கிறிஸ்துவே, நீர் சாவு வரைக்கும் கீழ்ப்படிந்தீர். ஆனால் கடவுள் உம்மை உன்னதத்திற்கு உயர்த்தினார் - எங்களுடைய சகோதரர் சகோதரிகளை உமது மாட்சியின் ஆட்சியில் ஏற்றருளும்.

## இறுதி செபம்

மகத்துவம் மிகுந்த ஆண்டவராகிய கடவுளே! இந்நாளில், சாவின்மேல் உம் ஒரே மகன் கொண்ட வெற்றியின் வழியாக, நிலைவாழ்வின் வழியை எங்களுக்குத் திறந்து விட்டீர். அவருடைய உயிர்ப்பின் விழாவைக் கொண்டாடும் நாங்கள், உம்முடைய தூய ஆவியால் புதுப்பிக்கப்பட்டு, வாழ்வின் ஒளியில் மீண்டும் உயிர்த்தெழுவோமாக.

முதல்: கிறிஸ்துவின் அமைதியில் சென்று வாருங்கள். அல்லேலூயா, அல்லேலூயா.
எல்: கடவுளுக்கு நன்றி. அல்லேலூயா, அல்லேலூயா.

உம்மோடு தூய ஆவியின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர்வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமைகள் அனைத்தினின்றும் பாதுகாத்து, நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.

ஆமென்

INTERNAL CIRCULATION ONLY
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

முன்மொழி 1:மகதலா மரியாவும் வேறொரு மரியாவும் ஆண்டவர் வைக்கப்பட்டிருந்த கல்லறையைப் பார்க்கச் சென்றார்கள், அல்லேலூயா.

## சங் 110, 1-5, 7

ஆண்டவர் என் தலைவரிடம்
நான் உம் பகைவரை உமக்குக்
கால்மணையாக்கும்வரை
நீர் என் வலப்பக்கம் வீற்றிரும் என்று உரைத்தார்.

வலிமைமிகு உமது செங்கோலை
ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச் செய்வார்:
உம் எதிரிகளிடையே ஆட்சி செலுத்தும்!

நீர் உமது படைக்குத் தலைமை தாங்கும் நாளில்
தூய கோலத்துடன் உம் மக்கள் தம்மை
உமக்கு உவந்தளிப்பர்:
வைகறை கருவுயிர்த்த பனிபோல்
உம் இளம் வீரர் உம்மை வந்தடைவர்.

மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே
என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார்:
அவர் தம் மனத்தை மாற்றிக்கொள்ளார்.

என் தலைவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார்:
தம் சினத்தின் நாளில் அவர்
மன்னர்களை நொறுக்குவார்.

வழியில் உள்ள நீரோடையிலிருந்து
அவர் பருகுவார்:
ஆகவே அவர் தலைநிமிர்ந்து நிற்பார்

### பிதாவுக்கும்...

முன்மொழி 1: மகதலா மரியாவும் வேறொரு மரியாவும் ஆண்டவர் வைக்கப்பட்டிருந்த கல்லறையைப் பார்க்கச் சென்றார்கள், அல்லேலூயா.

முன்மொழி 2: இதோ, ஆண்டவரை வைத்த இடத்தை வந்துபாருங்கள், அல்லேலூயா.

## சங் 114 : 1-8

எகிப்து நாட்டைவிட்டு இஸ்ரயேலர்
வெளியேறிய பொழுது,
வேற்று மொழி பேசிய மக்களை விட்டு
யாக்கோபின் குடும்பம் புறப்பட்டபொழுது,
யூதா கடவுளுக்குத் தூயகம் ஆயிற்று
இஸ்ரயேல் அவரது ஆட்சித்தளம் ஆனது

கடல் கண்டு ஓட்டம் பிடித்தது
யோர்தான் பின்னோக்கிச் சென்றது.
மலைகள் ஆட்டுக்கிடாய்கள் போலும்
குன்றுகள் செம்மறிகள் போலும் துள்ளிக் குதித்தன.

கடலே! நீ விலகி ஓடும்படி உனக்கு நேர்ந்தது என்ன?
யோர்தானே! நீ பின்னோக்கிச் சென்றது ஏன்?
மலைகளே! நீங்கள் ஆட்டுக் கிடாய்கள் போல
குதித்தது ஏன்?
குன்றுகளே! நீங்கள் செம்மறிகள் போல் துள்ளியது ஏன்?

பூவுலகே! தலைவர் முன்னிலையில் நடுநடுங்கு!
யாக்கோபின் கடவுள் முன்னிலையில் நடுக்கமுறு!
பாறையை அவர் நீர்த் தடாகம் ஆக்குகின்றார்,
கற்பாறையை அவர் வற்றா நீர்ச்சுனை ஆக்குகின்றார்.

### பிதாவுக்கும்...

முன்மொழி 2: இதோ, ஆண்டவரை வைத்த இடத்தை வந்துபாருங்கள், அல்லேலூயா.

முன்மொழி 3: இயேசு அவர்களிடம், என் சகோதரர்களிடம் சென்று, அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள், அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார், அல்லேலூயா.

## திருவெளி 19: 1 ஆ 2, 5-7

எல் : அல்லேலூயா!
முதல் : மீட்பும்மாட்சியும் வல்லமையும் நம் கடவுளுக்கே உரியன.
எல் : அல்லேலூயா (அல்லேலூயா).
முதல்: ஏனெனில் அவருடைய தீர்ப்புகள் உண்மை உள்ளவை, நீதியானவை.
எல்: அல்லேலூயா (அல்லேலூயா) அல்லேலூயா

முதல் : கடவுளின் பணியாளர்களே, நம் கடவுளைப் புகழுங்கள்.
எல் : அல்லேலூயா (அல்லேலூயா)

முதல்: அவருக்கு அஞ்சிநடப்பவர்களே, சிறியோர்களே, பெரியோர்களே, நீங்கள் அனைவரும் நம் கடவுளைப் புகழுங்கள்.
எல் : அல்லேலூயா (அல்லேலூயா) அல்லேலூயா
முதல்: உன் கடவுளாகிய ஆண்டவர், எல்லாம் வல்லவர், அவர் ஆட்சி செலுத்துகின்றார்.
எல்: அல்லேலூயா (அல்லேலூயா)

முதல்: எனவே மகிழ்வோம், பேருவகையுடன் அவரைப் போற்றிப் புகழ்வோம்.
எல்: அல்லேலூயா (அல்லேலூயா) அல்லேலூயா

முதல்: ஏனெனில் ஆட்டுக் குட்டியின் திருமண விழா வந்துவிட்டது.
எல்: அல்லேலூயா (அல்லேலூயா).

முதல்: மணமகளும் விழாவுக்கு ஆயத்தமாய் இருக்கிறார்
எல் : அல்லேலூயா (அல்லேலூயா) அல்லேலூயா

### பிதாவுக்கும்...

முன்மொழி : இயேசு அவர்களிடம், என் சகோதரர்களிடம் சென்று, அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள், அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார், அல்லேலூயா.

## அருள்வாக்கு எபி 10: 12-14

கிறிஸ்து ஒரே பலியைப் பாவங்களுக்காக என்றென்றைக்கும் எனச் செலுத்திவிட்டு, கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்துள்ளார். அங்கே தம் பகைவர் தமக்குக் கால்மணை ஆக்கப்படும்வரை காத்திருக்கிறார். தாம் தூயவராக்கியவர்களை ஒரே பலியினால் என்றென்றைக்கும் நிறைவுள்ளவராக்கினார்

## சிறு மறுமொழி

முன்மொழி : ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே, இன்று அக்களிப்போம். அகமகிழ்வோம். அல்லேலூயா.

## கன்னிமரியின் பாடல்



முன்மொழி:
அன்று வாரத்தின் முதல் நாள்,
அது மாலை வேளை,
யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள்
தாங்கள் இருந்த இடத்தின்
கதவுகளை மூடிவைத்திருந்தார்கள்.
அப்போது இயேசு அங்கு வந்து,
அவர்கள் நடுவில் நின்று,
"உங்களுக்கு அமைதி
உரித்தாகுக!" என்று
வாழ்த்தினார். அல்லேலூயா.

என் ஆன்மா ஆண்டவரில் களிகூருகின்றது
என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம் களிகூருகின்றது.
ஏனெனில், தாழ்நிலை நின்ற தம் அடிமையைக் கடைக்கண் நோக்கினார்.

இதோ! இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும், என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே.
ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும் செயல் பல புரிந்தார். அவர்தம் பெயர் புனிதமாமே.
அவர்தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத் தலைமுறை தலைமுறையாய் உளதாமே.

அவர் தமது கைவன்மையைக் காட்டினார். நெஞ்சிலே செருக்குற்றவர்களைச் சிதறடித்தார்.
வலியோரை அரியணையினின்று அகற்றினார், தாழ்ந்தோரை உயர்த்தினார். பசித்தோரை நலன்களால் நிரப்பினார், செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்.

நம் முன்னோருக்கு அவர் சொன்னது போலவே, ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிவந்தோர்க்கும் என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து தம் அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்.

### பிதாவுக்கும்...

முன்மொழி:அன்று வாரத்தின் முதல் நாள், அது மாலை வேளை, யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து, அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். அல்லேலூயா.